## இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான

# சமூக நல்லிணக்கத்தை பேணிக் காத்து வருபவர் ‘தகைசால் தமிழர் விருது’ பெறும் பேராசிரியர் காதர் மொய்தீன்!

## கட்சித் தலைவர்கள் பாராட்டு!



**சென்னை, ஜூலை 8-**

**இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையிலான சமூக நல்லிணக்கத்தை பேணி காத்து வருபவர் தகைசால் தமிழர் விருது பெறும் பேராசிரியர் காதர் மொய்தீன் என்று அரசியல் கட்சித் தலைவர்கள் புகழாரம் சூட்டியுள்ளனர்.**

இக்கட்சித் தலைவர்களின் பேட்டி சன் நியூஸ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகியுள்ளது. அதனை இங்கே தொகுத்து அளித்துள்ளோம்

**தொல்.திருமாவளவன்**

இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமான சமூக நல்லிணக்கத்தை பேணி காத்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு உற்றத் துணையாக இருந்து சமூக நீதிக்கு அரணாக இருந்து பாதுகாத்து வருபவர். மிக உயர்ந்த பண்புகளுக்கு சொந்தக்காரர், எளியவர்களையும் மதிப்பவர். மாண்புகளைப் பெற்றவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு எப்படி உற்றத் துணையாக இருந்தாரோ, அதே போல இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெரும் துணையாக தோளோடு தோள் கொடுத்து இருக்கிறார்.

அத்தகைய தகுதி வாய்ந்த தமிழரான பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களை தேர்வு செய்து சிறப்பித்திருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பீட்டர் அல்போன்ஸ்**

பட்டியலின மக்கள், அடித்தட்டு மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மையின மக்கள், இந்தச் சமூகங்களைச் சார்ந்த சாதனையாளர்களை அங்கீகரிப்பதற்கு யாரும் இல்லை என்ற சூழ்நிலை வந்த போது தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சாதனைத் தமிழர்களை அடையாளம் கண்டு சாதனைத் தமிழர்களாக மட்டுமல்ல வாழ்க்கை முழுவதையும் தமிழ்ச் சமுதாயத்திற்கு அர்பணித்த அற்புதமான மனிதர்களை அடையாளங் கண்டு, ஒவ்வொருவருக்கும் தகைசால் விருது வழங்கி வருகிறார்.

நம்முடைய நூற்றாண்டு காலம் வாழ்ந்து பெருமை சேர்த்த சங்கரய்யா, அன்புக்குரிய அண்ணன் நல்ல கண்ணு அவர்கள், இலக்கிய செல்வர் குமரி அனந்தன் அவர்கள், விடுதலை ஆசிரியர் அய்யா வீரமணி அவர்கள், இன்று இந்த ஆண்டு, கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் பரம்பரையில் வந்து, பொது வாழ்க்கையிலே புனிதமாகக் கருதி தன்னலமற்ற பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள் இந்த விருதுக்கு சக தகுதி உள்ளவர்கள், கல்லூரி பேராசிரியராக இருந்து ஒப்பற்ற அறிஞராக இருந்து, சிறுபான்மை மக்களுக்காக தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் ஒப்படைத்து, பதவி இல்லாமல் பொது சேவை செய்வதை மட்டுமே தனது வாழ்க்கையின் நோக்கமாக வாழ்கின்றவர், காட்சிக்கு எளியவர், கடுஞ்சொல் அற்றவர், அற்புதமான மனிதநேய பண்பாளர், அவருக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தகைசால் விருது வழங்கி இருப்பது சாலப் பொருத்தம், பாராட்டுதலுக்குரிய ஒன்று. இதனால் நம்முடைய பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள் பெருமைப்படுகிறார்கள்.

இந்த விருது அவருக்கு வழங்கப்படுகிறது. இந்த விருது வழங்கிய முதலமைச்சர் அவர்களும் வாழ்த்தப்படக் கூடியவர். பாராட்டப்படக் கூடியவர். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டுகிறேன்.

**கே.பாலகிருஷ்ணன்**

காதர்மொய்தீன் அவர்கள் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக்கின் அகில இந்தியத் தலைவராக இருப்பது, இந்தியாவில் மதச்சார்பற்ற கொள்கையில் மக்கள் ஒற்றுமைக்காக அயராது பணியாற்றிக் கொண்டிருப்பது தன்னுடைய மூத்த வயதில் கூட இந்தியா முழுவதும் பயணம் செய்து, சிறுபான்மை மக்களை திரட்டுவது மட்டுமல்ல, சிறுபான்மை மக்களுக்கும், பெரும்பான்மை மக்களுக்கும் ஒரு பாலமாகத் திகழ்ந்து வருபவர் பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள்!

அதுமட்டுமல்ல; கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தமிழ், ஆங்கிலம், உருது, இந்தி மொழிகளில் புலமைப் பெற்றவர்.

அப்படிப்பட்ட மக்களுக்காகப் பணியாற்றக் கூடிய அருமையாகத் திகழக் கூடிய காதர் மொய்தீன் அவர்களைத் தேர்வு செய்து, தகைசால் தமிழர் விருது வழங்கி இருப்பது உண்மையிலேயே பெருமைக்குரியதாக நான் கருதுகிறேன். இந்த விருதினைப் பெற்றிருக்கின்ற பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பேராசிரியர் ஜவாஹிருல்லா!**

பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள், கல்வியாளர், கல்வியாளர் மட்டுமின்றி பலரும் கல்வி பயில உதவியவர். திருச்சி மாநகரில் மிகவும் குறைந்த கட்டணத்தில் மாணவர்களுக்கான விடுதியை, நடத்தி வருகிறார்.

85 வயதைக் கடந்தும் கூட இன்றும் தமிழ்நாட்டின் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று, சிறப்பான நல்லிணக்கப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

தமிழ்நாட்டின் நலனில் சிறந்த அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்ற பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களுக்கு “தகைசால் தமிழர்” விருது வழங்கப்பட்டு இருப்பது மிகவும் பொறுத்தமானது,

அதிலும் குறிப்பாக உள்ளாட்சி முதல் நாடாளுமன்றம் வரை இஸ்லாமியர்களுக்கு அரசியலில் முக்கியத்துவம் சரியான முறையில் தர வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை முன்வைத்து மனித நேய மக்கள் கட்சி மதுரையில் மாநாடு நடத்தக் கூடிய இந்தத் தருவாயில்நம்முடையமுதலமைச்சர் அவர்கள் பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களுக்கு “தகைசால் தமிழர்” விருது வழங்கி இருப்பது மிகவும் பொறுத்தமானது.

மீண்டும் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பேராசிரியர் காதர்மொய்தீன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அரசியல் கட்சித் தலைவர்கள் பேட்டியளித்தனர்.

---

### கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை! புதுக்கோட்டை தெற்கு மாவட்ட

## பாக முகவர்கள் (BLA2 BDA ) பூத் டிஜிட்டல் ஏஜென்ட். ஆலோசனைக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!



புதுக்கோட்டை, ஜூலை 8-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், கனிம வளங்கள் மற்றும் கரங்கத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

இன்று (08.07.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) திருமண மஹாலில் பு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பாக முகவர்கள் (BLA2 BDA ) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான கே.என்.நேரு கழக தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை யாற்றுகிறார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார் , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பாக முகவர்கள் (BLA2 BDA ) பூத் டிஜிட்டல் ஏஜென்ட்,

மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய , நகர ,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் பணி சம்பந்தமாக.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



முதலமைச்சர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்று கடலில் தவறி விழுந்து உயிரிழந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவி வழங்கிட உத்தரவிட்டதைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் மணமேல்குடி வட்டம், கோட்டைப்பட்டினம், கொடிகுளம் கிராமம், ராமநகரைச் சேர்ந்த உயிரிழந்தவரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவித் தொகைக்கான காசோலையினை வாரிசுதாரரிடம் வழங்கினார். உடன், அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர்ச.சிவக்குமார், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

---

## அரியலூர் மாவட்ட தி.மு.க. BLA 2, BDA ஆய்வுக்கூட்டம்!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், ஜூலை 8 -

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர், மற்றும் ஜெயங்கொண்டம் தொகுதி பாக நிலை முகவர்கள் BLA 2, BDA ஆய்வுக் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் கழக சட்டத் திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் நடைபெற்றது.

நடைபெற்றக் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர், மண்டல பொறுப்பாளர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு பேசியதாவது:

இரண்டு மாதம் முன்பு வரை வருகின்ற தேர்தல் சவால் நிறைந்ததாக இருக்கும் என நினைத்தோம். தற்போது நமது கூட்டணியில் எந்தவித சஞ்சலமும், சலசலப்பும் இல்லாமல் அனைவரும் ஒற்றுமையாக உள்ளோம். ஆனால், எதிரணியி னர் அப்படி அல்ல. பி.ஜே.பி. கூட்டணியில் இணைந்தவுடன், அதிமுக தொண்டர்கள் மனம் சோர்ந்து விட்டனர். ஆட்சி அமைந்தால், அந்த அமைச்சரவையில் பிஜேபியும் பங்கு பெறும் என்று பாஜகவினர் சொல்லினர். ஆகையால் அவர்களுக்குள் ஒரு ஒற்றுமை இல்லாத நிலை உள்ளது.

பா.ம.க.வினருக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக, நமக்கு ஒரு சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த அரியலூர், பெரம்பலூரில் அது நமக்கு ஒரு கூடுதல் பலம். பா.ஜ.க.வினர் தாங்கள் தேர்தலில் வெல்லவில்லை என்றாலும் பரவாயில்லை. ஆனால், தி.மு.க. வெல்லக் கூடாது என நினைக்கின்றனர். அதனால் தான் நடிகர்கள் எல்லாம் அரசியலுக்கு வருகின்றனர். நாளையே முதல்வர் ஆகிவிட்டது போல் நான் உங்களோடு வரவில்லை, அவர்களோடு செல்லவில்லை என கூறிக் கொண்டுள்ளார். அதற்கெல்லாம் நாம் கவலைப் பட தேவையில்லை. ஆனால் நாம் அலட்சியமாக இருக்கக் கூடாது கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்த நான்காண்டு சாதனைகளை மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள், BLA 2 மற்றும் BDA பாக நிலை முகவர்கள் அனைவரும் பொதுமக்களை அவர்களது இல்லத்திற்கு நேராகச் சென்று கழக திராவிட மாடல் அரசின் சாதனைகளை அவர்களிடத்தில் எடுத்துக் கூறி அவர்களை கழகத்தில் உறுப்பினர்களாக சேர்க்கவேண்டும் அந்த பணியை நாம் கொஞ்சம் கூட தொய்வில்லாமல் செய்து முடிக்கவேண்டும் 7 வது முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்க நாம் அனைவரும் ஓர் அணியில் திரள வேண்டும் என அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

இக்கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாளை.அமரமூர்த்தி, அரியலூர் தொகுதி மேலிட பார்வையாளர் அன்பரசன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு, ஒன்றிய கழகச் பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், ம.அன்பழகன், ரே.அசோக சக்கரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர். கலியபெருமாள், வி.எழில்மாறன், இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ.இளையராஜா, நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ். முருகன், இரா, செந்தில்குமார்,

நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் ப.கோபாலகிருஷ் ணன், அல்போன்ஸ், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், பொதுக்குழு உறுப்பினர்கள், இரா.பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதி கருணா நிதி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சி.லூயி கதிரவன், இரா.குலோத்துங்கன், க.கருப்புசாமி, க.அருண் ராஜா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர் .முருகேசன், வீரசிவா, சு.வசந்த பகலவன் மற்றும் மாநில,மாவட்ட ஒன்றிய,நகர,பேரூர் கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இறுதியாக மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன் நன்றி கூறினார்.



புதுக்கோட்டை மாநகரம் 22 வது வட்டக் கழகத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற தலைப்பில் இல்லம் தோறும் உறுப்பினர் சேர்க்கை முகாம் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர தி.மு.க. பொறுப்பாளர் வே.ராஜேஷ், புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் கார்த்திகேயன் மற்றும் ப. ரெங்கராஜன் எம்.ஆனந்த், மாநகர கழக, வட்டக் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

---

## 40 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆம்பூர் ஆர். சம்பங்கி**

(முன்னாள் எம்.எல்.ஏ.,
முன்னாள் நகர சபைத் தலைவர்)

### வணங்குகிறோம், வாழ்த்திடுங்கள்!

**தர்மமே, எங்கள் தந்தையே,**
**அண்ணாவின் அடிச்சுவட்டை வாழ்வில்**
**உன் வழியாய்க் கொண்டவரே,**
**பொன் கழகம் புவி சிறக்க – கலைஞர்**
**புனிதரோடிணைந்தவரே**
**விண் உதிக்கும் சூரியனாய் – கொள்கை**
**உயிர் முழக்கம் செய்தவரே**
**கண்மூடும் நாள் வரைக்கும் – கழகக்**
**கண்மணியாய் இருந்தவரே**
**துன்பங்கள் சூழுகையில் – அதனை**
**துச்சமென உமிழ்ந்தவரே**
**இன்று வானிலிருந்து வாழ்த்து மழை – எங்கள்**
**இதயத்தில் பொழிபவரே**
**என்றும் நல்வழியில் நாம் நடத்தும் கழகம்**
**காத்திட வாழ்த்திடுங்கள்**

மகன்கள் : (லேட்) **ஆர்.எஸ்.மனோகர்** குடும்பத்தினர்
**ஆர்.எஸ். ஆனந்தன்** எக்ஸ் எம்.சி.,
திருப்பத்தூர் மாவட்டக் கழக அவைத் தலைவர்,
**ஆர்.எஸ்.ராஜு** பி.காம்.,
மகள் : **ஆர்.எஸ்.சாந்தி** மற்றும் மருமகள்கள், மருமகன்
பேரன், பேத்திகள், குடும்பத்தினர்.